சுவிஸ் தமிழர் உதைப்பந்தாட்ட சம்மேளனம்
Schweiz Tamilisch`s Fußballverband
Association de football du Tamil Suisse
Federcalcio del Tamil Svizzera

31. August 2015

16.08.2015 அன்று நடைபெற்ற 2015-2016ம் ஆண்டிற்கான பொதுக்கூட்டத்தின் அறிக்கையும், சில முடிவுகளும்.

1. சம்மேளனத்தை தவிர்ந்த அனைத்து சுற்றுப்போட்டி நடத்துனர்களும் குறைந்தது 4 பந்துகள் வைத்திருந்தல் வேண்டும்.
2. ஒரு கழகத்திலிருந்து விலகுவதற்கான கடிதம் சம்மேளனத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டியதில்லை. ஆனால் அதற்கான கடிதத்தையும், கழகத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டையும் மின்னஞ்சல் மூலம் அனுப்புவதொடு அனைத்து படிவத்தையும் கடித மூலம் அனுப்புதல் வேண்டும்.
3. சம்மேளன இணையத்தளத்திலும், App பிலும் நேரடி முடிவுகள் (live ticker) செய்தல் வேண்டும் (செய்வதற்கான கட்டுப்பணம் 25.- SFR)
4. சுற்றுப்போட்டிகளின் போது ஆதரவாளர்களால் இடம் பெற்றும் விதிமுறை மீறல் தொடர்பில் எம்மால் வழங்கப்படுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கைகளை அக்கழகமே பொறுப்பு நடைமுறைப் படுத்தல் வேண்டும், கழகம் அவ் ஆதரவாளர்களை கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் சம்மேளனத்திற்கு எழுத்து மூலம் அறியத்தரும் பட்சத்தில் சம்மேளனம் நேரடியாக நடவடிக்கையெடுக்கும்.
5. சுற்றுப்போட்டிகளுக்கான திகதிகள் இரு வாரத்திற்கு ஒரு சுற்றுப்போட்டியென ஒழுங்கில் உள்ளது. சுற்றுப்போட்டிக்கான திகதிகள் கழகங்களினால் முதலில் தரப்பட்டு தற்காலிகமாக முன்பதிவு செய்து கொள்ளலாம் மைதான பதிவு கடிதத்தை (Reserve Later) அடுத்து வரும் சம்மேளன கூட்டத்தில் வழங்குதல் வேண்டும், இல்லாத பட்சத்தில், அக் கழகம் ஒரு வருடத்திற்கு சுற்றுப்போட்டி நடத்த அனுமதி மறுக்கப்படும் ஆனால் அதே நாளை மைதான பதிவு கடிதத்துடன் (Reserve Later) வேறு கழகம் பதிவு செய்தால் அக்கழகத்திற்கே முன்னுருமை வழங்கப்படும்.
6. வெளியரங்க சுற்றுப்போட்களுக்கு புள்ளிப் பட்டியலில் 2 புள்ளிகள் தரவரிசையில் அதிகமாக்கப்பட்டுள்ளது-
7. வீரர்களின் அடையாள அட்டைக்கான தரவுகள் உண்மையானதென அக் கழகப் பொறுப்பாளர் எழுத்து மூலம் தரும் பட்சத்தில் அடையாள அட்டைகள் அக் கழகப் பொறுப்பாளரிடம் வழங்கப்படும். ஆனால் வீரரின் பதிவில் ஏதாவது பிழைகள் வரும் பட்சத்தில் பொறுப்பாளர் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.
8. இனிவரும் காலங்களில் சுற்றுப்போட்டிகளில் அடையாள அட்டை சம்மேளனத்தால் பரிசோதிக்க வரும் பட்சத்தில் அடையாள அட்டைகள் அனைத்தும் பொறுப்பாளர் காண்பிக்க வேண்டும்.
9. வருமாண்டில் 7 பேர் கொண்ட சுற்றுப்போட்டி நடாத்தப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் நிதி சுவிஸ் தெரிவு அணிக்கான செலவுகளுக்காக பயன் படுத்தப்படும்.

சு. சிவகுமார்

பொறுப்பாளர்

சுவிஸ் தமிழர் உதைப்பந்தாட்ட சம்மேளனம்


<u>தொடர்புகளுக்கு</u>

**STFA-Schweiz/** Schweizerische Tamilische Fussballverein/ 6037 Root /
Raiffeisenbank IBAN: CH46 8120 3000 0509 9347 5/ **@:** stfa@stfainfo.ch சிவகுமார்: 076/4288505